## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் - 2018

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர பணியகத்தின் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பணியகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பணியகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பணியகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வது எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பணியகத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பணியகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பணியகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என

நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எனது தீர்மானங்கள் கணக்காய்வாளரின் அறிக்கை திகதி வரை பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையிலாகும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பணியகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பணியகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பணியகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிறுவகம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துச் செல்வது அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 சனவரி 01 முதல் முதிர்வடையும் வரை முதலீடு தொடர்பான கணக்கு வைத்தல் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 09 - நிதி உபகரணங்கள் (SLRFS 09) பின்பற்றப்பட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்காக இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 07 மற்றும் கணக்கீட்டு நியமம் 032 மற்றும் 39 SLFRS 07 மற்றும் LKAS 32, 39 பின்பற்றப்பட்டுள்ளதாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டிருந்தது. | குறித்த கணக்கு வைத்தல் இ.க.நி 39 இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இ.க.நி 32 மற்றும் இ.க.நி. 07 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் குறித்த முதலீட்டை காண்பிப்பதற்கும் வெளிப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களின் பிரகாரம் முதலீடு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2006 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரியதாக ஊழியர் சேமலாப நிதியத்திற்காக செலுத்த வேண்டியிருந்த ரூபா 6,261,168 தொகையான மிகைக் கட்டண கொடுப்பவிற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் அறிக்கையிடல் காலப்பகுதியின் பின்னர் மற்றும் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு முன்னர் கிடைத்திருந்த போதும் அது தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் 10 - அறிக்கையிடல் திகதியின் பின்னர் நடைபெற்றமை பிரகாரம் தேவையான சீராக்கங்களை நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டின் போது உரிய சீராக்கங்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | பணியகத்தினால் நீண்டகால சேவை நலன்புரி நிதியத்திற்கு உரியதாக பேணப்பட்டு செல்லப்பட்டிருந்த திட்டத்தின் 2017 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 151,637,722 ஆக இருந்தது. பணிப்பாளர் சபை அங்கீகாரமின்றி 2018 ஆம் ஆண்டி போது அது ரூபா 137,976,269 வரை குறைக்கப்பட்டிருந்தது. நீண்கால சேவை நலன்புரி நிதியத்திற்குரிய சொத்துக்கள் பேணிச்செல்லும் நோக்கம் நிறைவேற்றப்படும் | கணக்கீட்டு நியமத்தில் பணிக்கொடைக்காக முதலீடு வைத்துக்கொள்ளல் கட்டாயமில்லலை. 2018 ஆம் ஆண்டின் போது குறித்த பொறுப்பு இனங்காணப்பட்டு அப்பொறுப்புக்கள் தீர்வுசெய்வதற்காக திரவ மற்றும் திரவமல்லாத சொத்துக்களில் சீராக்கம் | ஆயுட் கணிப்பீடு மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் குறித்த பொறுப்புக்கள் இனங்காணப்பட்டு அப்பொறுப்புக்களை தீர்வு செய்வதற்காக திரவ மற்றும் திரவமல்லாத சொத்துக்களை சீராக்கம் செய்யப்பட்டுள்ளதாக |

| | | | |
|---|---|---|---|
| | வகையில் இலங்கை கணக்கீட்டு நியமம் 19 – ஊழியர் நலன்புலி (LKAS 19) இன் பிரகாரம் இச்சொத்துக்கள் பேணிச் செல்லப்பட்டிருந்தன. | செய்யப்பட்டுள்ளது. | உறுதிப்படுத்தப்பட வில்லை. ஆதலால் திட்டச் சொத்துக்கள் பதிவழிப்பது தொடர்பாக மீண்டும் கருத்திற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | தொழிலுக்காக வெளிநாடு செல்லும் தொழிலாளர்களிடமிருந்து விமானப் பிரயாணச்சீட்டுக்களை கொள்வனவு செய்வதற்காக பணியகத்திற்கு கிடைக்க வேண்டியதாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 1,702,912 தொகை தொடர்பாக மூல ஆவணங்கள் மற்றும் விரிவான அட்டவணைகளும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் ரூபா 11,024,393 ஆன அந்நியச் செலாவணி நன்மையை குறித்த கணக்கை பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் 2019 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கு எதிர்பார்த்துள்ளோம். | தெரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட எதிர்வரும் கொடுப்பனவிற்கு உரிய வேறு கணக்கிற்காக இலங்கை கணக்கீட்டு நியமம் 21 இன் பிரகாரம் அந்நியச் செலாவணி சாதகம் / பாதகம் கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தொழிலுக்காக வெளிநாடு செல்லும் தொழிலாளர்களிடமிருந்து விமானப் பிரயாணச்சீட்டுக்களை கொள்வனவு செய்வதற்காக புலம்பெயர் தொழிலாளர்களிடமிருந்து அறவிடப்பட்ட பணத்தில் விமானப் பிரயாணச்சீட்டுக் கொள்வனவு செய்ததன் பின்னர் எஞ்சிய ரூபா 2,615,836 தொகையை உரிய புலம்பெயர் தொழிலாளர்களுக்கு செலுத்த வேண்டியதாக காண்பிப்பதற்கு பதிலாக பணியகத்தின் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது. | பணியகத்தினால் இதற்காக பொது மேந்தலை செலவினமொன்றாக செலவிடப்பட்டதா் இவ்வருமானம் அச்செலவினத்தின் மீளளிப்பொன்றாக கருத முடியும். | பணியகச் சட்டத்தின் 17(3)(ஈ) பிரிவின் பிரகாரம் பணியகத்திற்கு சேரும் வருமானம் பொது மேந்தலை செலவினத்திற்காக பயன்படுத்த வேண்டும். அதன் பிரகாரம் முறையான அங்கீகாரமின்றி வெளிநாடு செல்லும் புலம்பெயர் ஊழியர்களுக்கு வழங்கப்படும் சேவைகளுக்காக வெவ்வேறு கட்டணங்கள் அறவிடும் இயலுமை பணியகத்திற்கு இல்லை. பணியகத்தின் பொது மேந்தலை செலவினத்திற்காக சேரும் பணம் போதுமாக இல்லையாயின் |

| | | | |
|---|---|---|---|
| | | | வருமானத்தை சேகரிப்பதற்காக முறையான அங்கீகாரமொன்று பெற்றுக்கொள்ளல் வேண்டும். |
| (ஆ) | பணியகத்தின் கணனி முறைமையின் பிரகாரம் பேரேட்டுக் கணக்குகளில் உள்ளடக்கப்பட்ட அந்நியச் செலாவணி பரிமாற்றல் இலாபம் ரூபா 176,892,642 ஆக இருந்த போதும் நிதிச் செயலாற்றல் கூற்றில் அது ரூபா 167,445,298 என பதிவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆண்டின் இலாபம் ரூபா 9,447,344 குறைத்து பதிவு செய்யப்பட்டிருந்தது. | உரிய சீராக்க கணக்குகள் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் 2019 ஆம் ஆண்டிற்காக தேவையான சீராக்கங்கள் செவ்தற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | பேரேட்டுக் கணக்குகளில் மீதிகளைப் பயன்படுத்தி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | காலாவதியாகும் வரை நிறுத்தி வைக்கப்படும் முதலீடு செயற்திறனான முதலீட்டு முறைமை (Effcttive Intrest Rate) காலக்கழிவு பெறுமதிக்கு அளவிடல் மேற்கொள்ளப்படுவதாக நிதிக் கூற்றுக்களில் கணக்கீட்டுக் கொள்கைளின் மூலம் வெளப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் (Coupon Interest Rate) வெளியிடப்பட்ட வட்டி அடிப்படையில் கணக்கிடப்பட்ட வட்டி முதலீடாக இனங்காணப்பட்டிருந்தது. | முதலீட்டு வருமானம் வட்டி விகித்திற்கு காலக்கழிவு பெறுமதி அளவிடல் மேற் கொள்ளல் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ருந்ததுடன் குறித்த கணக்கிடல் அரச கணக்காய்வு பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளது. | பதிலை ஏற்றுக்கொள்ள முடியாது. முடிவுக் கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட 7 ஆம் அட்டவணையின் பிரகாரம் பிரசுரிக்கப்படட வட்டி விகிதத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்டு திறைசேரி பிணைமுறி வட்டி குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஈ) | பணியகத்தினால் வெவ்வேறு கடன் முன்மொழிவு முறைகளுக்குரியதாக நிதிக் கூற்றுக்களில் பிணை வைப்பாக வைக்கப்பட்டுள்ள ரூபா 328,071,264 தொகையான 10 நிலையான வைப்புக்கள் தொடர்பான நிதிக்கூற்றுக்களில் முறையாக வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | குறித்த வெளிப்படுத்தல் குறிப்பு இல 24 இன் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், ரூபா 328,071,264 கூட்டுத் தொகையாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | குறித்த நிலையான வைப்புக்கள் தொடர்பான தகவல்கள் தெளிவாகவும் சரியாகவும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டிற்குரிய நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ஆண்டின் வரி வருமான ஏற்பாடு ரூபா 486,647,581 ஆக இருந்த போதும் கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட கணக்கிடலின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 476,881,608 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ஆண்டின் வரிச் செலவினம் ரூபா 9,765,973 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 01/01/18 ஆந் திகதி முதல் 31/03/18 ஆந் திகதி வரை பழைய உள்நாட்டு இறைவரி திணைக்களச் சட்டத்தின் பிரகாரம் 01/04/18 - 31/12/18 வரை புதிய உள்நாட்டு இறைவரி திணைக்களச் சட்டத்தின் பிரகாரம் வரி கணிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் | உள்நாட்டு இறைவரி திணைக்கள சட்டத்தின் பிரகாரம் காலப்பகுதிக்குரிய வரி ஏற்பாடு சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | அதன் பிரகாரம் வரிச் செலவினம் ரூபா 476,881,608 ஆக இருந்தது. மேற்படி புதிய வரி கணிப்பிடல் மூலம் இடம்பெற்ற திருத்தங்கள் எதிர்வரும் ஆண்டில் சீர் செய்யப்படும். |

**1.5.4 அதிகாரம் பெறப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

| அதிகாரம் பெறப்படாத கொடுக்கல் வாங்கல்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| பணியகத்தின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் தொழில்துறை படிகள், வருடாந்த காப்புறுதி படிகள், உபகாரப் படிகள், விசேட உபகாரப் படிகள், போக்குவரத்து படிகள், கடன் வட்டி மீளளிப்பு, மருத்துவ பட்டியல் மீள்நிரப்பு போன்ற படிகளுக்கு மேலதிகமாக திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் பணியகத்தினால் தயாரிக்கப்பட்ட நியதிகளின் பேரில் 06 முறைமைகளின் கீழ் மொத்தம் ரூபா 86,399,621 ஆன பதவியணியினர் படிகள் கொடுப்பனவு செய்வதற்கு பணியகம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இதற்காக தேவையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | படிகளை கொடுப்பனவு செய்வதற்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ள துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| விடயம் | | தொகை | சமர்ப்பிக்கப் படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | தொழிலுக்காக வெளிநாடு செல்லும் தொழிலாளர்களிடமிருந்து விமானப் பிரயாணச்சீட்டுக்களை கொள்வனவு செய்வதற்காக பெற வேண்டியதாகக் காட்டப்பட்டுள்ள தொகை | 1,702,912 | மூல ஆவணங்களும் விரிவான கட்டளைகளும் | இது கணக்கு வைத்தல் பிழையொன்றாக இனங்காணப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக மேலும் பரிசோதித்து குறித்த சீராக்கல் 2019 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | குறித்த தகவல்கள் பரீட்சிக்கப்பட்டு இடம்பெற்றுள்ள கணக்கீட்டு தவறு திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | செலுத்த வேண்டிய விமான டிக்கட் கட்டணங்கள் | 2,774,784 | உரிய மூல ஆவணங்கள் | இது கணக்கு வைத்தல் பிழையொன்றாக இனங்காணப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக மேலும் பரிசோதித்து குறித்த சீராக்கல் 2019 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | குறித்த தகவல்கள் பரீட்சிக்கப்பட்டு இடம்பெற்றுள்ள கணக்கீட்டு தவறு திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்த வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| செலுத்த வேண்டிய செலவினமாக 2015 ஆம் ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வந்த காணப்படும் புலம்பெயர் தொழிலாளர்களிடமிருந்து அறவிடப்பட்ட கொரியா, விசாக் கட்டணங்கள் ரூபா 6,640,400 தொகையும் தங்காலை பயிற்சி நிலையத்திற்காக செலுத்த வேண்டிய வாடகை ரூபா 149,826,492 தொகையும் உணவு வழங்குனருக்கு செலுத்த வேண்டிய ரூபா 1,776,569 தொகையும் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் தீர்வு செய்வதற்கு பணியகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இம்மீதிகள் தீர்வு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நீண்டகாலமாக இருந்து வரும் மீதிகளை துரிதமாக தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1985 இன் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகச் சட்டம் | | | |
| (i) 52(1) பிரிவு | அனுமதிப்பத்திரதாரரால் பெற்றுக் கொண்ட ஒவ்வொரு சகல தரகுப் பணத்திற்கும் 05 சதவீதம் அளவில் கணக்கிடப்பட்டு | பணியகத்தின் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் இந்த வரி அறவிடப்பட்ட போதும் அநேகமான சந்தர்ப்பங்களில் | முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் பணியகச் சட்டத்தில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செஸ் வரியொன்று அறவிடப்பட வேண்டிய போதிலும், முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் புலம்பெயர் வீட்டுப்பணிப்பெண்களுக்கு வெளிநாட்டு எஜமான்களிடமிருந்து தரகுப்பணம் கருத்திற் கொள்ளாமல் ஒரு வீட்டுப்பணிப் பெண்ணுக்கு ரூபா 5,000 வீதம் செஸ் வரி அறவிடப்பட்டிருந்தது. | வெளிநாட்டு முகவர் நிறுவனங்கள் இந்த தரகு தொகை வெளிப்படுத்துவதில் இருந்து தவிர்ப்பதாலும் அது தொடர்பாக மேலதிக பரீட்சிக்கும் முறையொன்று இல்லாமையாலும் வீட்டுப் பணிப் பெண் தரகுப் பணமாக சேவையில் பெண்கள் ஊழியத்திற்காக ரூபா 100,000 கிடைப்பனவு என்ற அடிப்படையில் இப்பணம் அறவிடப்படுகின்றது. | குறிப்பிடப்பட்டிருந்த ஏற்பாடுகளுக்கு முரணாக வெவ்வேறு கட்டணங்களை தீர்மானிப்பதற்கு பணியகத்திற்கு இயலுமையொன்று இல்லாது இருந்ததுடன் இதனூடாக அரசிற்கு கிடைக்க வேண்டிய வருமானம் குறித்துரைக்கப்பட்ட தன் பிரகாரம் அறவிடப்படாமை தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ii) | 42(2) ஆம் பிரிவு | தொழிலாளர் நலன்புரி நிதியம் ஆரம்பித்த நோக்கங்களுக்கு முரணாக மீளாய்வாண்டில் ரூபா 499,473,516 கூட்டுத்தொகை பணியகத்தின் ஊழியர்களின் சம்பள மற்றும் படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக பணியகத்தினால் பொது செலவினங்களிலிருந்து 5 சதவீதம் அதாவது ரூபா 12,018,115 தொகை அந்நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | வெளிநாடு செல்லும் இலங்கையர்களுக்கு தேவையான சேவைகளை வழங்குவதற்காக போதியளவு பதவியணியினர் சேவையில் ஈடுபடுத்த வேண்டியதுடன் பொது மேந்தலை செலவினம் செலவிடப்பட வேண்டும். அதற்குரிய செலவினத்திற்காக வருடாந்த தொழிலாளர் நலன்புரி நிதியத்திலிருந்து ஒரு பகுதி அதற்காக ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. | இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தினை ஆரம்பித்ததன் அடிப்படை நோக்கம் புலம்பெயர் தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்புரி வசதிகள் வழங்குவதாகும். அந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக போதியளவு பதவியணியினை சேவையில் ஈடுபடுத்துதல் மற்றும் அவர்களுக்கு சம்பளம் மற்றும் படிகளை கொடுப்பனவு செய்வதற்கு தேவையான நிதியங்களை பெற்றுக்கொள்ளும் வகை சட்டத்தின் 13(7)(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஊழியர்களின் சம்பளம், படிகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | மற்றும் பொது மேந்தலை செலவினம், தொழிலாளர் நலன்புரி நிதியத்திற்கு செலவினம் பொறுப்பொன்றாக இருக்ககூடாது. |
| (iii) | 48(ஈ) பிரிவு | தொழிலாளர்களுக்காக வெளிநாடு செல்லும் தொழிலாளர்களை பயிற்சியளிப்பதற்காக தொழிலாளர் நலன்புரி நிதியம் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் அதற்காக எவ்வித பணமும் செலவிடப் பட்டிருக்கவில்லை. அத்துடன் ரூபா 1,308,838,726 தொகையான மொத்த செலவினத்தில் 22 சதவீதம் மாத்திரம் வெளிநாட்டு சென்ற தொழிலாளர்களின் நலன்புரிக்காக செலவிடப்பட்டிருந்தது. | வெளிநாடு செல்லும் இலங்கையர்களுக்கு தேவையான சேவைகளை வழங்குவதற்காக பணியகத்தினால் போதியளவு பதவியணியினரொன்று தேவையான வசதிகளுடன் இணைக்கப்பட வேண்டும். இச்செலவினம் தொழிலாளர் நலன்புரி நிதியத்தை தாபிக்கும் நோக்கங்களுக்கு உரியதாக இருப்பதால் நலன்புரி நிதியத்தின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | பணியக சட்டத்தின் 48(1) பிரிவின் பிரகாரம் தொழிலாளர் நலன்புரி நிதியத்திலிருந்து செய்யக்கூடிய செலவினம் மாத்திரம் அந்நிதியத்திலிருந் து செலவிடப்பட வேண்டும். |
| (iv) | சட்டத்தின் II ஆம் பகுதியின் 17 ஆம் பிரிவின் 3 ஆவது உப பிரிவு | பணியக நிதியத்தின் செலவிடக்கூடிய நோக்கங்களுக்கு முரணாக முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் பணியகத்தின் பதவியணியினருக்காக மருத்துவப் பட்டியல் மீள் அளிப்பு மற்றும் அவசர விபத்து இழப்பீடு வழங்கும் காப்புறுதி முறையொன்று 1995 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் பணியக வருமானத்தில் ரூபா 44,287,858 கூட்டுத்தொகை இந்த காப்புறுதி முறைமையின் கீழ் மருந்து பட்டியல் மீள் அளிப்பிற்காக செலவிடப்பட்டிருந்தது. | இதற்குரிய அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பணியக சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடு களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் நலன்புரி முன்மொழிவு முறைமையை செயற்படுத்துவதற்க ாக முறையான அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (v) 46(1) ஆம் பிரிவு | தொழிலாளர் நலன்புரி நிதியத்தின் பெயரில் வேறாக வங்கிக் கணக்கொண்று நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் இணக்கப்பாட்டுடன் ஏற்படுத்தப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பணியகத்தின் பொதுவான நிதி சேகரிப்பிற்காக 03 வங்கிக் கணக்குகள் பேணப்படுகின்றன. இந்த சேகரிப்பு கணக்குகளில் பணம் பணியகத்தின் நிதியத்திற்கு உதிர்தாகவும் நலன்புரி நிதியத்திற்கும் வெவ்வேறாக கணக்கு வைத்தல் சரியாக மேற்கொள்ளப்படுகின்றது | பணியகத்தின் சட்டத்தில் குறிப்பிடப்பட்டதன் காரணமாக தொழிலாளர் நலன்புரி நிதியத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்களுக்காக வேறான வங்கிக் கணக்கு பேணப்பட வேண்டும். |
| (ஆ) நிதிப்பிரமாணம் 103(1)(ஆ),104(1) மற்றும் PED/RED/2015/-8 பொது (i) 4.1(ஆ) பந்தி | 2017 ஆம் ஆண்டின் சனவரி முதல் 2018 ஆம் ஆண்டின் யூலை 31 ஆந் திகதி வரை 19 மாத காலப்பகுதியில் பணியகத்திற்குச் சொந்தமான 26 வாகனங்கள் 43 சந்தர்ப்பங்களில் விபத்திற்கு உட்பட்டிருந்ததுடன் அது தொடர்பான நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 20 காப்புறுதி உரித்து கோரல் கோவைகளை எழுமாறாக பரீட்சிக்கப்படுவதுடன் அவற்றில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களின் பிரகாரம் மேற்குறித்த காலப்பகுதியில் இடம்பெற்ற 34 விபத்துக்களின் படி விபத்துக்கள் தொடர்பான சாரதிகளால் எழுத்து மூலம் நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்க வில்லை. அத்துடன் 27 விபத்துக்கள் பொலிசிற்கு அறிக்கையிடப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வு அவதானிப்பு சரியாக இருப்பதுடன் எதிர்காலத்தில் அக்குறைபாடுகளை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் வாகனங்கள் விபத்து தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அவ்வாறான காப்புறுதி மேவுகை கிடைப்பதன் மூலம் நிறுவனத்திற்கு நட்டமொன்று இடம்பெறவில்லை என தீர்மானிக்க முடியாமல் இருப்பதுடன் காப்புறுதி தவணை கொடுப்பனவு, உரித்துக் கோராத உபகாரப் படிகள் இழக்கப்பட்டமை, விபத்து காரணமாக வாகனங்களின் பயன்பாட்டு ஆயுட்காலத்திற்கு இம்பெறும் சேதம் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (இ) 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளை மிகைத்து பணியகத்தினால் இடர்கடன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அக் கடன் மீதிகளில் | இதற்காக அங்கீகாரத்தை கோரி அமைச்சு செயலாளர் மூலம் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் | குறித்த கடிதத்தின் மூலம் சுற்றிக்கை எல்லையை மிகைத்து இடர்கடன் கொடுப்பனவிற்காக அங்கீகாரம் கிடைக்காமல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கூட்டுத்தொகை ரூபா 325,149,295 ஆக இருந்தது. ரூபா 500,000 இனை விஞ்சிய 137 இடர்கடன் மீதிகள் மற்றும் ரூபா 1,000,000 இனை விஞ்சிய 04 கடன் மீதிகள் மேற்படி மீதிகளில் உள்ளடக்கப்பட்டிருந்தன. | அதற்குரியதாக 2018 ஒக்தோபர் 15 ஆந் திகதிய PE/NEB/SLB FE/GEN/2018 ஆம் இலக்க புதிய கடிதம் வழங்கப்பட்டிருந்தது. | இருந்ததுடன் ஊழியர் கடன் தொடர்பாக சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2015 யூலை 10 ஆந் திகதிய 02'2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | 2015 ஆம் ஆண்டில் கைதவிர்ப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த 27 வாகனங்களில் 15 வாகனங்கள் கணக்காய்வு திகதியான 2019 நவம்பர் 01 வரையிலும் கைதவிர்ப்பதற்கு பணியகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இவ் வாகனங்களில் 05 விற்பனை செய்யப்பட்டு அகற்றப்பட்டுள்ளதுடன் ஒரு வாகனம் திருத்தம் செய்து பாவனைக்கு எடுக்கப்பட்டுள்ளது. எஞ்சிய வாகனங்களினை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | வாகனங்களினை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் பணியகத்தின் சமர்ப்பிக்கப்பட்ட செயற்பாட்டு நிதி விளைவுகள் ரூபா 1,166,607,206 இலாபமாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 882,369,779 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 284,237,427 ஆன அதிகரிப்பொன்றைக் காண்பித்தது. இந்த அதகரிப்பிற்கு வருமானம் ரூபா 443,408,908 ஆல் அதிகரித்தமை பதவியணியனர் செலவினம் ரூபா 162,037,987 ஆல் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவினங்களின் போக்கு பகுப்பாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் பணியகத்தின் வருமானம் 32 சதவீத்தினாலும் அதிகரித்தமைக்கு தூதரகங்களின் வருமானம் ரூபா 329,906,466 ஆல் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது. அவ்வாறே முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக செஸ் வருமானம் ரூபா 35,677,209, பயிற்சி வருமானம் ரூபா 33,656,127 மற்றும் அந்நியச் செலாவணி இலாபம் ரூபா 164,663,032 ஆலும் அதிகரித்தமையும் மேற்படி போக்கிற்கு காரணங்களாக இருந்தன. மீளாய்வாண்டின் பணியகத்தின் செலவினமும் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 322,921,859 ஆலும் அதிகரித்தருந்ததுடன் அதற்காக பதவியணியினர் கிரயம் ரூபா 162,037,987 ஆலும் பொது மேந்தலை செலவினம் ரூபா 72,939,927 ஆலும் செயற்பாட்டு செலவினம் ரூபா 60,022,190 ஆலும் அதிகரித்தமை காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2006 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பணியகத்தில் ஊழியர் சேமலாப நிதியக் கணிப்பீட்டின் போது வாழ்க்கைச் செலவுப்படி கவனத்தில் கொள்ளாமல் சேமலாப நிதி கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக, 10 வருடங்களாக அந்த நிதியத்திற்கு பணியகத்தின் பங்களிப்பிற்கு மேலதிகமாக ஊழியர் பங்களிப்பாக கூட்டுமொத்தமாக ரூபா 47,912,231 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டமையால் நிதி ரீதியான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்கள் சரியானது. ஊழியர் சேமலாப நிதியக் கணிப்பீட்டின் போது வாழ்க்கைச் செலவுப்படி கவனத்தில் கொள்ளப்பட வேண்டுமா இல்லையா என தெளிவாக இல்லாமையால் வாழ்க்கைச் செலவுப்படி ஊழியர் சேமலாப நிதியக் கணிப்பீட்டின் போது தவறியுள்ளது. | உத்தியோகத்தர்களின் கவனயீனம் காரணமாக இந்நட்டம் பணியகத்திற்கு ஏற்பட்டுள்ளதுடன் அதற்காக பொறுப்பாள உததியோகத்தர்கள் இனங்காணப்பட்டு நட்டத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பணியகத்தின் கீழ் செயற்படுத்தப்படும் வெளிநாட்டு தூதரகங்களில் 16 தொழிலாளர் நலன்புரி பிரிவுகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரொன்று அல்லது ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று இல்லாமல் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 135 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் அந்த உத்தியோகத்தர்களின் சம்பளம், படிகள் மற்றும் ஏனைய வசதிகளுக்காக மீளாய்வாண்டில் மொத்தம் ரூபா 663,811,831 செலவிடப்பட்டிருந்ததுடன் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தங்கியிருப்போரின் நேரடி செலவினத்திற்காக ரூபா 80,771,306 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தூதுவர் இல்லங்களின் | வெளிநாட்டு தூதுவர் இல்லங்களில் இராஜதந்திர உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு உரிய தயாரிக்கப்பட்ட புதிய ஆட்சேர்ப்பு நடைமுறை முகாமைத்துவம் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கு செயற்பாடுகள் தயார்ப்படுத்தப்பட்டிருந்தன.<br><br>வெளிநாட்டில் இலங்கை தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்புரிகளை வழங்குவதற்கு | பணியகத்தின் சட்டத்தின் பிரகாரம் வெளிநாட்டு தூதுவர்களுக்கான பொது கடமைகள் மற்றும் ஊழியர் சம்பளம் மற்றும் படிகள் பணியகத்தின் நிதிய மூலம் செலவிடப்பட்டிருந்ததுடன் தொழிலாளர் நலன்புரி நிதியத்திலிருந்து அச்செலவினத்தை மேற்கொள்ள முறையான அங்கீகாரமொன்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறான தொழிலாளர் நலன்புரி நிதியம் ஆரம்பிக்கும் நோக்கில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மொத்த செலவினத்தில் 89 சதவீதம் பதவியணியினர் செலவினத்திற்காக செலவிடப்பட்டிருந்தது. | முன்னுரிமை செயற்பாடாக கொண்டு வெளிநாட்டு தூதுவர் இல்லங்களுக்கு செயற்பாடு இணைக்கப்பட்டிருந்தது டன் அவர்களுக்கு தேவையான வசதிகளை பணியகத்தினால் வழங்கப்பட வேண்டும். | |
| (ஆ) | 1988 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டிருந்த புலம்பெயர் தொழிலாளர் பங்களிப்பு நிதியத்தை ஆரம்பிக்கும் நோக்கங்களை தெளிவுபடுத்தும் எழுத்துமூல தகவலொன்று பணியகத்திடம் இல்லாமல் இருந்ததுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1,573 புலம்பெயர் தொழிலாளர்களுக்கரிய ரூபா 7,954,452 மீதியொன்ற காணப்பட்டது. எனினும் அதற்குரிய முதலீடு மற்றும் கிடைக்க வேண்டிய பெறுமதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,775,029 ஆக மாத்திரமாக இருந்தமையால் அப்பொறுப்பினை தீர்வுசெய்வதற்கு போதியளவு சொத்துக்கள் நிதியத்திடம் காணப்படவில்லை. இந்நிதியத்தின் முகாமைத்துவம் தொடர்பாக முறையான வேலைத்திட்டமொன்று இல்லாதிருந்தமையால் நிதியம் செயற்பாடற்ற நிலைமைக்கு மாறியிருந்தது. | ஐந்தொகையில் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு பொறுப்பிற்கு சமமான முதலீட்டு பெறுமதியொன்று காணப்பட வேண்டும் என்ற கருதப்படும் நியதியொன்று இல்லையென குறிப்பிடுகின்றேன். பணியகத்தின் நடைமுறை மற்றும் நடைமுறையல்லாத பொறுப்புக்களின் கீழ் ரூபா 5.2 மில்லியன் கொடுப்பனவு செய்வதற்கு இருந்தும் அதற்கு ஒப்பாக ரூபா 16.5 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் காணப்பட்டன. அதன் பிரகாரம் மேற்படி நிதியத்தில் சொத்துக்களைத் தீர்ப்பதற்கு போதியளவு நிதி இல்லையென குறிப்பிடப்பட்டுள்ள கூற்றுடன் இணங்க முடியாது. | இந்நிதியத்திற்கு பங்களிப்பு செய்த தொழிலாளர்களுக்கு தமது பங்களிப்புத் தொகை மற்றும் நலன்களை கொடுப்பனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 1990/1991 மத்திய கிழக்கு யுத்தம் காரணமாக அவ்வலயத்தில் தொழிலில் ஈடுபட்டிருந்த இலங்கையர்களுக்கு இழப்பீடு கொடுப்பனவு செய்வதற்காக ஐக்கிய நாடுகளின் இழப்பீட்டு ஆணையாளரிடமிருந்து கிடைத்திருந்த நட்டஈடுகளுக்குரிய நிதியக் கணக்கில் 2018 திசெம்பர் 31 | இழப்பீட்டு ஆணையாளரிடமிருந்து கிடைத்த பணத்தை கொடுப்பனவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் வரை தற்காலிக வைப்புக்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வட்டித் தொகை உரிய நிதியத்திற்கு செலவு | இழப்பீட்டு உரித்தாளர்கள் மேலும் முன்வராவிட்டால் அது தொடர்பான உறுதிப்படுத்தபட்டு மிகை நிதியத்தை தீர்வு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இல் உள்ளவாறு மீதி ரூபா 3,184,109,533 ஆக இருந்ததுடன் அந்த இழப்பீட்டாளர்களுக்கு செலுத்த வேண்டிய பணம் ரூபா 251,453,848 ஆக இருந்தது. இந்த இழப்பீட்டுத் தொகை பணியகத்திற்கு கிடைத்து 20 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும், உரிய நலனாளிகளை இனங்கண்டு கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் முதலீடு செய்து வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே மிகை நிதி தொடர்பாகவும் முகாமைத்துவத்தினால் எவ்வித தீர்மானமொன்றும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வைக்கப்பட்டிருந்தது. 948 இழப்பீட்டாளர்களுக்கு செலுத்த நட்டஈட்டின் பெறுமதி ரூபா 251 மில்லியனாகும். எஞ்சிய இழப்பீட்டு காரர்கள் இழப்பீடு கோரிய சமர்ப்பிக்கப்பட்டால் கொடுப்பனவிற்காக இப்பணம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | இலங்கை சமுர்த்தி அதிகாரசபை மற்றும் பணியகத்தின் ஒத்துழைப்புடன் புலம்பெயர் ஊழியர்களுக்காக செயற்படுத்திய வீட்டுக் கடன் திட்டத்தின் கீழ் 2018 செப்தெம்பர் 20 ஆந் திகதி வரை 12,078 புலம்பெயர் தொழிலாளர்களுக்காக சமுர்த்தி வங்கி மூலம் ரூபா 3,557 மில்லியனான கடன் தொகை வழங்கப்பட்டிருந்தது. அதில் 1,573 புலம்பெயர் தொழிலாளர்களுக்கு கடன் வழங்கும் நிபந்தனைகளுக்கு புறம்பாகவும் எவ்வித பிணையொன்றும் வைக்கப்படாமலும் வழங்கப்பட்டிருந்த ரூபா 360.27 மில்லியனான கடன் கொடுப்பனவு தவிர்ப்புச் செய்யப்பட்டிருந்தது. இதுவரை அம்முறைமை செயற்படாது காணப்படுவதுடன் உடன்படிக்கையின் படி ரூபா 100 மில்லியன் வைப்புச் செய்வதற்கு பதிலாக இலங்கை வங்கியில் சமுர்த்தி அதிகாரசபையின் பெயரில் ரூபா 100 மில்லியன் வைப்புச் செய்ததன் காரணமாக அதற்குரிய வட்டியும் 2014 ஆம் ஆண்டு முதல் பணியகத்திற்கு கிடைத்திருக்கவில்லை. | இலங்கை வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 100 மில்லியனான பணம் மற்றும் அதற்குரிய வட்டி என்பவற்றை மீண்டும் பணியகத்திற்கு பெற்றுக்கொள்வதற்காக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே ரட்டவிரு கடன் பெற்றுக்கொண்டு மரணமடைந்துள்ள மற்றும் முழுமையாக அங்கவீனம் அடைந்துள்ள கடன் பெற்றோரின் கடன் மீதிகளை மேற்படி பணத்திற்கு கிடைக்கும் வட்டியை அறவீடு செய்வதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய பணத்தை அறவிடுவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | இந்நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்தும் இயலுமை தொடர்பாக கருத்திற் கொண்டதன் பின்னர் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்த வேண்டும். இப்பணத்தை தீர்வு செய்வதற்கு தேவையான துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

(உ) வெளிநாடுகளில் தொழிலில் ஈடுபட்டிருந்ததாக உறுதிப்படுத்தப்படாமல் எனினும் மீண்டும் செல்வதற்கு எதிர்பார்த்துள்ள தொழிலாளர்களுக்கு, தாம் முன்னர் தொழில் புரிந்த நாட்டின் மொழியை ஒன்றாக கதைக்கும் இயலுமை பரீட்சிக்கப்பட்டு 10 நாட்கள் பயிற்சி காலத்தை பூர்த்தி செய்து பணியகத்தில் பதிவு செய்து வெளிநாட்டு செல்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. பணியகத்தினால் வெளிநாட்டு தொழில் முகவர் நிறுவனங்களின் வேண்டுகோளின் பேரில் அப்பாடநெறி காலம் 02 சந்தர்ப்பங்களில் 02 நாட்கள் மற்றும் 02 நாட்கள் வரை குறைவடைந்திருந்தது. இதற்குரியதாக பணியகத்தின் பன்னிப்பிட்டிய பயிற்சி நிலையத்தில் நடாத்தப்பட்ட பாடநெறிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனைகளின் போது கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் கண்டறியப்பட்டன.

(i) நேர்முகக பரீட்சை குழுவிற்காக பணியகத்தின் பயிற்சி பிரிவு உத்தியோகத்தர் சமூகமளிப்பதற்கு பதிலாக பணியகத்தின் தொழிற்பாட்டு பணிப்பாளர் சமூகமளித்திருந்தார்.

(ii) பௌதீக கணக்காய்வு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 2019 யூலை 11 ஆந் திகதி நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிக்கு சமூகமளித்த 20 பேரில் 05 பேருக்கு அரபு மொழி கதைக்கும் இயலுமை காணப்படவில்லை. எனினும், நேர்முகப் பரிசோதனை சபையினால் அரபு மொழி கதைக்க முடியுமென போலியான சான்றிதழொன்று வழங்கப்பட்டிருந்தது.

தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட புலனாய்விற்குரிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைகருத்திற் கொண்டும் இந்நிகழ்ச்சி தோல்வியடைந்திருந்த நிகழ்ச்சியொன்றாகவும் இவ்வாறான நிகழ்ச்சிகளை முறையாக மேற்கொள்வதற்கும் உத்தியோகத்தரின் கட்டுப்பாட்டினால் மாத்திரம் செய்ய முடியாமல் இருக்கும் சந்தர்ப்பங்கள் இருப்பதால் இப்பயிற்சி நிகழ்ச்சிகள் தற்போது கொள்கையொன்றாக நிறுத்தப்பட்டுள்ளது.

புலம்பெயர் தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்புரியை கருத்திற் கொள்ளாமல் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களின் வேண்டுகோளின் பிரகாரம் செயற்படுதல் பணியகத்தின் பின்னர் ஆரம்பித்த நோக்கங்களுக்கு முரணாக செயற்படுவதாக இருப்பதால் இந்நிலைமை வேறுபட வேண்டியிருந்த கணக்காய்விற்கு உட்பட்ட இப்பயிற்சி நிகழ்ச்சிக்காக தொழிலாளர்களை தெரிவு செய்யும் போதும் நிகழ்ச்சிகளை நடாத்தும் போது இடம்பெற்றுள்ள முறைகேடுகளுக்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பில் தேவையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை

| | | | |
|---|---|---|---|
| (iii) | இப்பாடநெறியை பின்பற்றி வெளிநாடு சென்ற 77 புலம்பெயர் தொழிலாளர்களில் 67 பேர் முன்னர் வெளிநாடு செல்லாதோர் என குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் தகவல் முறைமையின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | 2013 ஆம் ஆண்டிலிருந்து பணியகத்திற்குரிய கட்டிடமொன்றில் நடாத்திச் செல்லப்படும் ஓமான் தூதரக அலுவலகத்திற்காக நடாத்தி வெளிநாட்டு அலுவலகம் அமைச்சிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 67,568,640 ஆன வாடகை பணிப்பாளர் சபை அங்கீகாரமின்றி வருமானத்திலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. | கிடைக்க வேண்டிய வருமானம் தொடர்பாக நிச்சயமற்ற நிலைமையில் காணப்படுவதன் பேரில் வருமானம் கூடுதலாக காண்பித்தல் இடம் பெறுவதால் வருமானமாக கணக்குகளில் உள்ளடக்கப்படவில்லை இது தொடர்பாக பணிப்பாளர் சபையின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | இவ்வாடகை அறவிடாமைக்கு காரணங்கள் சமர்ப்பித்து அந்த வருமானத்தை பதவழிப்பதற்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. |

## 3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வெளிநாட்டு தொழில் வாய்ப்பு துறையில் இடம்பெறும் வெவ்வேறு முறைகேடுகளை கட்டுப்படுத்துவதற்கான அமைச்சரவை தீர்மானமொன்று அடிப்படையில் பணியகத்தின் விசேட புலனாய்வு பிரிவு ஆரம்பிக்கப்பட்டு 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 15 பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட 36 பதவியணியினர் இணைக்கப்பட்டுள்ளனர். கணக்காய்வு தெரிவு பரிசோதனைக்கு உட்படுத்திய 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் 18 | வெளிநாட்டு புலனாய்வுப் பிரிவில் கடமை தொடர்பான பின்தொடர் நடவடிக்கை எடுப்பதற்காக பொலிஸ் திணைக்களத்தினால் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். பிராந்திய பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட முறைப்பாடுகளை விசாரித்தல், குறித்த பொலிஸ் நிலையத்தின்பிரதேச பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட முறைப்பாடுகளை விசாரணை செய்தல், உரிய பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரி மற்றும் | வெளிநாட்டு தொழில் துறையில் காணப்படும் வெவ்வேறு முறைகேடுகளை கட்டுப்படுத்தும் நோக்கில் அமைச்சரவை பரிந்துரை அடிப்படையில் இப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது ஆதலால் இடம் பெற்றுள்ள நிதி மற்றும் ஏனைய முறைகேடுகள் தொடர்பாக பணியகத்திற்கு முறைப்பாடு கிடைத்தன் பின்னர் |

| | | | |
|---|---|---|---|
| | மாத காலப்பகுதியில் வெளிநாட்டு தொழில் வழங்குனராக உடன்பட்டு ரூபா 108,463,384 பெறுமதியான பண மோசடிகளுக்குரிய 274 முறைப்பாடுகள் கிடைத்திருந்தது. வெளிநாட்டு தொழில்வாய்ப்பு பெற்றுத்தருவாக எழுத்து மூலம் உறுதிப்படுத்தப்படாமையால் அம்முறைப்பாடுகளுக்குரிய பிரதேசங்களின் பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறு அனுப்பி வைக்கப்பட்ட 20 முறைப்பாடுகளில் 19 இற்கு தீர்வு வழங்கப்பட்டிருக்கவில்லை என தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது கண்டறியப்பட்டது. | பொலிஸ் நிலையத்திற்குப் பொறுப்பான உதவி பொலிஸ் அத்தியட்சகரின் நேரடி கண்காணிப்பின் கீழ் காணப்படுவதால் அம் முறைப்பாடுகள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை தேவைப்படுவதில்லை. | அம் முறைப்பாடுகளுக்குரிய பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதன் பின்னர் பாதிக்கப்பட்டவருக்கு நிலையான தீர்வொன்று கிடைக்கின்றதா என்பது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை அப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | பணியக சட்டத்தின் பிரகாரம் தொழிலுக்காக வெளிநாடு செல்லும் தொழிலாளர் களுக்கு பயிற்சியளிப்பதன் மூலம் பணியகத்திற்கு வருமானம் உழைப்பிற்கு இயலுமையொன்று இல்லையென்பதாகவும் பணியகத்தினால் மீளாய்வாண்டில் அதன் மூலம் ரூபா 74,985,198 ஆன இலாபமொன்று உழைக்கப்பட்டிருந்தது. அவ்வாறு கட்டணங்களைத் தீர்மானிப்பதற்கு முறையான நடைமுறையொன்று இல்லாமையால் தேவைப்பாட்டினை மிகைத்து கட்டணங்கள் அறவிடப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | பணியகச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பயிற்சியளிப்பதற்காக கட்டணங்கள் அறவிடும் இயலுமை காணப்படுவதுடன் அக் கட்டணங்கள் அறவிடப்பட்டதா என்ற அடிப்படையாகும். இது தொடர்பாக தேவையான தீர்மானங்கள் பணியகத்தினால் தொழிலாளர் நலன்புரி நிதியத்தை நடாத்திச் செல்வதற்கு தேவையான கட்டணங்களை அறவிடுவதாக மேலும் மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | பணியகத்தினால் குறிப்பிடப்பட்ட விளக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் பணியக சட்டத்தின் அந்தந்த பிரிவுகளில் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக கட்டணங்கள் அறவிடப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் பணியக கூட்டத்தின் 48(ஈ) பிரிவின் இலங்கைக்கு வெளியே சேவையில் ஈடுபடுவதற்காக ஆட்சேர்க்கப்பட்டிருந்த இலங்கையில் பயிற்சியளித்தல் மற்றும் பழக்கப்படுத்துதல் தொடர்பாக மேற்கொள்ளப்படும் சகல செலவினங்களும் |

| | | | |
|---|---|---|---|
| | | | தொழிலாளர் நலன்புரி நிதியத்திலிருந்து செலவிடப்பட வேண்டும். அவ்வாறே கட்டணங்கள் அறவிடுவதற்கு அல்லது வருமானத்தை உழைப்பதற்கு இயலுமை காணப்படவில்லை. |
| (இ) | தேசிய சேமிப்பு வங்கியின் கணக்கிலிருந்து இலங்கை வங்கியின் நடைமுறைக் கணக்கிற்கு மாற்றபட்ட ரூபா 23,000,000 தொகை நாட்கள் தாமதமாகி குறித்த கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் அக்காலப்பகுதியில் குறைத்த 2 கணக்குகளில் இத்தொகை பதிவு செய்யப்படாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும் அது தொடர்பான எவ்வித நடவடிக்கைகளும் கணக்காய்வினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. உரிய நடைமுறைக் கணக்கின் அக்காலப் பகுதியில் ரூபா 43 மில்லியனை மிகைத்து மீதியொன்று காணப்பட்டதால் இவ்வாறு பணம் மாற்றலின் தேவைப்பாடு என்ன என்பது தொடர்பாக தெளிவாகவில்லை. | இலங்கை வங்கி துறையின் பேணிச் சென்று வரும் நடைமுறைக் கணக்கு மூலம் அதிகளவு கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெற்றுள்ளதால் குறைந்த ரூபா 20 – 25 மில்லியன் அளவிலான மீதி எப்போது பேணிச் செல்லப்படுகின்றது. | இத்தொகைக்குரிய கணக்கிற்கு குறித்துரைக்கப்பட்ட திகதியில் செலவு வைக்கப்படாமைக்கு காரணம் பரீட்சிக்கப்பட வேண்டியதுடன் வங்கி கணக்கு செயற்படுத்துவது தொடர்பாக பலமான உள்ளக கட்டுப்பாடொன்று பேணப்பட வேண்டும். |

**3.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

---

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| குவைத் மற்றும் கட்டார் நாடுகளுக்கு தொழிலுக்காக தொழிலாளர்களை அனுப்பும் போது அந்த தொழிலாளர்களுக்குரிய இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் சான்றிதழின் பேரில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்ட பொலிஸ் விடுவிப்பு அறிக்கை வழமையான | இது தொடர்பாக பணியகம் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் உத்தியோகத்தர்களால் பொலிஸ் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுட | இத் தொழில் முகவர் கம்பனி தொடர்பாக பணியக சட்டத்தின் 31 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| நடைமுறையின் பிரகாரம் குறித்த பொலிஸ் நிலையங்களிலிருந்து பெற்றுக் கொள்ளாமல் தொழில் முகவர் நிறுவனங்கள் மூலம் பெற்றுக்கொண்டு உறுதிப்படுத்தப்பட்டு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இரத்தினபுரி பொலிஸ் நிலையத்திலிருந்து காணாமல் மூலதனமாக அறிக்கையிடப்பட்டிருந்து பொலிஸ் அறிக்கை பதிவேட்டிலிருந்து வழங்கப்பட்ட போலியான 35 பொலிஸ் விடுவிப்பு சான்றிதழ் பணியகத்தினால் மேலே குறிப்பிடப்பட்ட உறுதிப்படுத்தப்பட்டு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டதன் பின்னர் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு போலி சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தொழில் முகவர் நிறுவனம் தொடர்பாக 2019 சனரி 17 ஆந் திகதி பணியில் அறிந்திருந்த போதும் அந் நிறுவனத்திற்கு எதிராக எவ்வித நடவடிக்கையையும் எடுப்பதற்கு கணக்காய்வு திகதியான 2019 நவம்பர் 20 ஆந் திகதி வரை பணியகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ன் கலந்துரையாடி பொலிஸ் விடுவிப்பு அறிக்கைகளை நேரடியாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. சம்பவம் தொடர்பாக வெளிநாட்டு தொழில் தகவல்கள் பணியகத்திற்கு கிடைக்காததன் பேரில் நிறுவனத்தின் தொழில் கட்டணங்களை அங்கீகரித்து வழங்குதல் இடை நிறுத்தம் செய்யப்பட்டிருந்தது. | |

### 3.5 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 2017 ஏப்ரல் மாதத்தில் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த கதிர்காமம் விடுமுறைக் கேந்திரத்தின் நிர்மாண வேலைகள் ரூபா 119,617,558 கிரயத்தில் பூர்த்தி செய்து 2019 ஆகஸ்ட் 28 ஆந் திகதி கையளிக்கப்பட்டதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், போதியளவு நீர் வசதிகள் இல்லாததன் பேரில் அந்த விடுமுறை கேந்திரத்தை கணக்காய்வு திகதியான 2019 நவம்பர் 01 ஆந் திகதி அளவில் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாமல் காணப்பட்டது. | பணியகத்தினால் 2019 ஆகஸ்ட் 24 ஆந் திகதி கதிர்காமம் சுற்றுலா விடுதியின் சாவி கையேற்கப்பட்டது. எனினும் அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்தினால் இதுவரை எழுத்து மூலம் கட்டிடத்தை ஒப்படைப்பதற்கு உரிய ஆவணங்கள் மற்றும் திட்டங்கள் பணியகத்திற்கு வழங்கப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே நீரை பெற்றுக்கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. | இக்கட்டிடத்தில் தற்போது காணப்படும் குறைபாடுகளை விரைவில் சரிசெய்து பயன்பாட்டிற்கு எடுக்கப்பட வேண்டும். |

### 3.6 ஏனைய அமைப்புக்களுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| தொலைத்தொடர்பு, வெளிநாட்டு தொழில் வாய்ப்பு மற்றும் விளையாட்டு அமைச்சிற்கு இரண்டு உத்தியோகத்தர்கள், இலங்கை வெளிநாட்டு தொழில் முகவராண்மைக்கு நான்கு உத்தியோகத்தர்கள் மற்றும் மாகாண ஆளுனர் அலுவலகத்திற்கு இரண்டு உத்தியோகத்தர்கள் என பணியகத்தின் எட்டு உத்தியோகத்தர்கள் 2018 ஆம் ஆண்டின் போது வேறு நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர். | சேவை தேவைப்பாடு கருத்திற் கொள்ளப்பட்டு பணியகத்தினால் பதவியணியினர் அந்நிறுவனங் களுக்கு இணைக்கப்பட்டுள்ளனர். | பணியகத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட மற்றும் ஆட்சேரப்பு செய்யப்பட்ட பதவியணியினரை வேறு நிறுவனங்களுக்கு விடுவித்தல் பணியகத்தின் நடடிக்கைகளுக்காக தடையாக இருப்பதால் அந்த உத்தியோகத்தர்களை மீண்டும் பணியகத்தின் செயற்பாடுகளுக்காக இணைக்க வேண்டும். |